*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 261/2020***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திரு.பழனிவேல் த/பெ. ராமசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07.10.2025.**

துவக்க நேரம் 12.16 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உலிபுரத்தில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 27.09.2019 அன்று காலை 05.30 மணியளவில் எனது வீட்டில் இருந்த மாட்டுக்கொட்டகையை கூட்டிக்கொண்டிருந்தேன். அப்பொழுது எனது பக்கத்து தோட்டத்தில் இருக்கின்ற முருகேசன் என்பவர் கட்டையை எடுத்துவந்து, எனது மண்டையிலும், எனது காலிலும் அடித்துவிட்டார். அதில் எனக்கு ரத்தக்காயம் ஏற்பட்டது.

2) அப்பொழுது அங்கு வந்த தினேஷ் என்பவர் கட்டையால், எனது தலை மற்றும் எனது இடது கையில் அடித்தார். அதில் எனது இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டது. சுமதி என்பவர் கட்டையால், எனது முதுகு மற்றும் காலில் அடித்தார். எனது சின்னம்மா, முருகேசனின் அம்மா எனது வீட்டிற்கு வந்தபொழுது, அவரையும் முருகேசன், தினேஷ், சுமதி ஆகிய மூவரும் சேர்ந்து கட்டையால் அடித்துவிட்டார்கள்.

3) நாங்கள் வலி தாங்கமுடியாமல் சத்தம்போட்டோம். எங்களது சத்தம் கேட்டு அக்கம் பக்கம் இருந்தவர்கள் வந்தவுடன், எதிரிகள் எங்களை கெட்ட வார்த்தையால் திட்டி, இப்ப தப்பிச்சிட்டிங்க என்னைக்கா இருந்தாலும் உங்கள கொல்லாம விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்கள்.

அருகிலிருந்து வந்த செந்தில், சதாசிவம் மற்றும் சிலர் என்னை, அருகில் உள்ள ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்து சிகிச்சைக்கு சேர்த்தார்கள்.

4) நடந்த சம்பவத்தை குறித்து ஆத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து, தம்மம்பட்டி காவல் நிலைய போலிசார், என்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**A1, A3 ஆஜர். A2 ஆஜரில்லை. மூன்று எதிரிகள் தரப்பிலும் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 12.26 A.N

C UDAYASUNDARAM Digitally signed by C UDAYASUNDARAM Date: 2025.10.07 15:52:13 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 261/2020***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-6)***

*Name / Father's Name:* ***திரு.செந்தில் த/பெ. கண்ணையன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07.10.2025.**

துவக்க நேரம் 12.27 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உலிபுரத்தில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். சொந்தமாக லாரியும் வைத்துள்ளேன். சாட்சி பழனிவேல், எனது பெரிய மாமனார் ஆவார். எதிரிகள், எனது உறவினர்கள் ஆவார்கள். கடந்த 27.09.2019 அன்று நான், எனது மாமனார் மோகனசுந்தரம் வீட்டில் படுத்திருந்தேன். அன்று விடியற்காலை 05.30 மணியளவில் வெளியே சத்தம் கேட்டது.

2) என்ன சத்தம் என்று பார்ப்பதற்கு அருகில் சென்றேன். ரோட்டில் முருகேசன், சுமதி, தினேஷ் ஆகிய மூவரும் அவர்களது கைகளில் கட்டையை வைத்துக்கொண்டு பழனிவேலை பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டிக்கொண்டு இருந்தார்கள். நான் அங்கு செல்வதை பார்த்தவுடன், அவர்கள் என்னைக்கா இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று பழனிவேலை பார்த்து சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்கள்.

3) எதிரிகள், பழனிவேலை அடித்ததில் பழனிவேலின் தலை மற்றும் அவரது இடது கை, அவரது வலது கால் முட்டியில் இரத்தக்காயம் இருந்தது. மேலும் பழனிவேலின் மனைவி அமராவதியின் இடுப்பிற்கு கீழ், எதிரிகள் அடித்து, அமராவதியின் கையையும் உடைத்துவிட்டார்கள். அதில்

அமராவதியின் வலதுகையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. மேலும் பழனிவேலின் கையிலும், மண்டையிலும், எதிரிகள் அடித்துவிட்டார்கள். அதில் பழனிவேலின் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது, மேலும் பழனிவேலின் மண்டையில் தையல் போட்டுள்ளார்கள். அதன் பிறகு நான், தம்மம்பட்டி காவல் நிலையத்திற்கு இது குறித்து தகவல் தெரிவித்துவிட்டு, ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு அடிபட்ட பழனிவேல் மற்றும் அமராவதியை அழைத்துவந்து சிகிச்சைக்கு சேர்த்தேன். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**A1, A3 ஆஜர். A2 ஆஜரில்லை. மூன்று எதிரிகள் தரப்பிலும் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 12.36 A.N

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.10.07 15:52:28 +0530

Judicial Magistrate No.2, Attur.